செய்தி வெளியீடு எண்:266 நாள்:29.05.2009

# செய்தி வெளியீடு

## சென்னைக் கடற்கரையை அழகுபடுத்தும் பணிகளில் முதற்கட்டமாக கோட்டையின் எதிரில் ரிசர்வ் வங்கி முதல் போர் நினைவுச் சின்னம் வரை ஏறத்தாழ 10 கோடி ரூபாய் செலவில் பொலிவுபெறும் பூங்கா !

## முதலமைச்சர் கலைஞர் திறந்து வைத்தார் !

சென்னை மாநகரை அழகுபடுத்தும் நோக்கிலும், சுற்றுலாப் பயணிகளைக் கவரும் நோக்கிலும் மாநகரெங்கும் பூங்காக்கள் பல உருவாக்கப்பட்டு வருகின்றன. 100 கோடி ரூபாய் செலவில் அடையாறு பூங்கா அமைக்கும் பணி நடைபெறுகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் சென்னை மாநகரின் பல்வேறு பகுதிகளிலும் 21 கோடியே 4 இலட்சம் ரூபாய் செலவில் 339 இடங்களில் பூங்காக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், 17 கோடியே 47 இலட்சம் ரூபாய் செலவில் 15 இடங்களில் பூங்காக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இவையல்லாமல் உலகின் மிகச் சிறந்த கடற்கரைகளில் ஒன்றாகிய சென்னைக் கடற்கரையை 40 கோடி ரூபாய் செலவில் அழகுபடுத்தும் பணி நடைபெறுகிறது. அதன் முதல்கட்டமாக, சென்னை – கோட்டையின் எதிரில் இராஜாஜி சாலையில் ரிசர்வ் வங்கி முதல் போர் நினைவுச் சின்னம் வரை இருபுறமும் அழகு மிளிரும் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. இப்பூங்கா அமைந்துள்ள இராஜாஜி சாலையின் இருபுறமும், 935 மீட்டர் நீளத்திற்கு கிரானைட் கற்கள் பதிக்கப்பட்ட நடைபாதைகள் அமைக்கப்பட்டு; இந்த நடைபாதைகளின் ஓரத்தில் துருப்பிடிக்காத இரும்புக்குழாய்களுடன் கிரானைட் தூண்களும் அமைக்கப்பட்டுள்ளன. 18 ஏக்கர் பரப்புள்ள நிலப்பகுதியில் 12 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள இப்பூங்காவின் உட்புறத்திலும் கிரானைட் கற்கள் பதிக்கப்பட்ட நடைபாதைகளுடன், இடையிடையே பொதுமக்கள் அமர்வதற்காக 20 இடங்களில் கிரானைட் கற்களால் இருக்கைகளும்; மரங்கள் நெருங்கியுள்ள பகுதிகளில் 10மீட்டருக்கு 10 மீட்டர் அளவில் சதுரவடிவில் பொதுமக்கள் அமர்ந்து ஓய்வெடுப்பதற்கு வசதியாக 18 இடங்களில் கிரானைட் கல் மேடைகளும் அமைக்கப்பட்டுள்ளன. பூங்காவின் பின்புறம் உள்ள சுவர் பகுதிகளில் குழந்தைகள் முதல் பெரியவர் வரை அனைவரையும் கவரும் வகையில் அழகிய சித்திரங்களும் தீட்டப்பட்டுள்ளன.

தலைமைச் செயலகத்தின் நேர் எதிரில் ஏறத்தாழ 30 மீட்டர் விட்டமுள்ள வட்ட வடிவ நீரூற்று ஒன்றும், அதேபோல, போர் நினைவுச் சின்னம் அருகில்

கிரானைட் கற்களால் ஆன மற்றொரு நீரூற்று ஒன்றும் உயர்தர கிரானைட் கற்கள் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன. உடற்பயிற்சி மற்றும் யோகாசன பயிற்சிகள் செய்வதற்கு வசதியாக நான்கு பெரிய கிரானைட் மேடைகளும், வாகனங்களை நிறுத்துவதற்கு வசதியாகக் கான்கிரீட் தரையுடன் நிறுத்துமிடங்களும், ஓட்டுநர்கள் அமர்ந்து ஓய்வெடுப்பதற்கு வசதியாக கிரானைட் கல் மேடைகளும் அமைக்கப்பட்டுள்ளன. அருகிலுள்ள அன்னை சத்தியாநகர் குடிசைவாழ் மக்களின் பயன்பாட்டிற்குத் தேவையான வசதிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

ஏறத்தாழ 9 கோடியே 74 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள இப்பூங்கா பகுதியில், அழகிய வடிவமைப்பில் 83 மின்கம்பங்கள் 400 வாட் திறனுள்ள சிறப்பு வகை விளக்குகளுடன் 50 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் செலவில் அமைக்கப் பட்டுள்ளன.

மேலும், கொடிமரச் சாலை சந்திப்பில் 30 மீட்டர் உயரமுள்ள உயர்கோபுர மின்விளக்குக் கம்பம் ஒன்று 5 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் செலவிலும்; தலைமைச் செயலகத்தின் முன்புறம் உள்ள வாகனங்கள் நிறுத்தும் இடத்தில் 30 மீட்டர் உயரமுள்ள மற்றொரு உயர் கோபுர மின்விளக்குக் கம்பம் 7 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் செலவிலும் அமைக்கப்பட்டுள்ளன. மாலை நேரங்களில், பொதுமக்களுக்கு வசதியாக பூங்கா முழுவதிலும் மின் விளக்கு வசதிகள் போதுமான அளவில் அமைக்கப்பட்டுள்ளன.

சென்னை மாநகருக்கு அழகையும், பொதுமக்களுக்கும், குழந்தைகளுக்கும் மகிழ்ச்சியையும், மனநிறைவையும் அளிக்கத்தக்க இப்பூங்காவை முதலமைச்சர் கலைஞர் இன்று (29.5.2009) திறந்து வைத்தார். அத்துடன், இப்பூங்கா மேலும் பொலிவு பெற வேண்டும் என வாழ்த்துக் கூறி புதிய மரக்கன்றுகளையும் நட்டார்.

இந்நிகழ்வின்போது தமிழக நிதி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின், சென்னை மாநகர மேயர் திரு. மா. சுப்பிரமணியன் தலைமைச் செயலாளர் திரு. கே.எஸ்.ஸ்ரீபதி, இ.ஆ.ப., நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலாளர் டாக்டர் நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., ஆகியோரும், அரசின் பல்வேறு உயர் அலுவலர்களும் உடனிருந்தனர்.

*****

வெளியீடு:இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை.